# இலங்கை மகா வங்கி

## நாணயச்சபை நிதி அமைச்சருக்கு சமர்ப்பித்த ஆண்டு அறிக்கையின் சுருக்கம்.

## 1959ம் ஆண்டுக்குரியது.

### முகவுரை

1949ம் ஆண்டின் 58ம் இலக்க, நாணயவிதி அதிகாரச்சட்டத்தின் 35ம் பகுதிக் கிணங்க, நாணயச்சபையின் இப்பத்தாவது ஆண்டு அறிக்கை வெளியிடப்படுகின்றது. நிதி ஆண்டு முற்றுப்பெற்ற பின்னர், மூன்றுமாதங்களுக்குள்—அதாவது பங்குனி மாதம் 31ம் திகதி யளவில்—மகா வங்கியின் நிலைமையையும், அந் நிதி ஆண்டில் நாணயச்சபை மேற் கொண்ட கொள்கைகள், நடவடிக்கைகள் பற்றிய பரிசீலனையையும், மற்றும் இக்கொள் கைகளையும், நடவடிக்கைகளையும், மேற்கொள்ளும்படி தூண்டிய, பொருளாதார நிதி சம்பந்தமான சூழ்நிலைகளின் பாகுபாட்டையும், விளக்கும் ஆண்டு அறிக்கையை நாண யச்சபை, நிதி அமைச்சருக்குச் சமர்ப்பித்து, பிரசுரித்தல் வேண்டும் என்று இப்பகுதி யில் அமைக்கப்பட்டுள்ளது.

மகா வங்கியின், நிதி வருடம் ஆங்கில பஞ்சாங்க ஆண்டு ஆகும். பின்வரும் அறிக் கை முக்கியமாக 1959ம் ஆண்டைப்பற்றியதேயாகும்.

---

## I. 1959ம் ஆண்டில் பொருளாதார நிலையின்போக்கு

### (அ) முன்னுரை

கடந்த ஆண்டு அறிக்கையில் உள்ளதைப்போலவே, இவ்வறிக்கையிலும் பணம் சம் பந்தமான மாறுபாடுகளை வெளியிடுவதற்கு முன்னர் (பகுதி II) தேசிய பொருளாதார நிலைமையின் முக்கிய போக்கு பரிசீலனை (பகுதி I) செய்யப்பட்டுள்ளது. அதன் பின், 1959ம் ஆண்டின் பொருளாதார நிதி நிலைமையின் பயனாக எழுந்த பணம் சம்பந்த மான பிரதான பிரச்சினைகளை சமாளிக்க, நாணயச்சபை மேற்கொண்ட கொள்கைகள், நடவடிக்கைகள், முதலியவற்றின் பாகுபாடு பற்றிக் கூறப்படுகிறது.

சில முக்கிய காட்டிகளை ஒப்பித்து, 1959ம் ஆண்டுப் பொருளாதாரத்தின் பிரதான போக்கின் குணங்குறிகளை சுருக்கமாக எடுத்துக்காட்டலாம். ஏற்றுமதிகள் மூலம் கிடைத்த மொத்த வருமானம் முந்தைய ஆண்டில் பார்க்க கூடியதாக இருந்தது. இவ்வாறு ஏற்றுமதிகள் நல்ல சீரான நிலையில் இருந்தன என்றாலும், இலங்கையின் பொருளா தார வரலாற்றிலே, ஆகக் கூடிய புறநாட்டு வியாபார நட்டம் பதிவு செய்யப்பட்டது. இந்த 2510 இலட்சம் ரூபாய் நட்டம், வர்த்தக மாற்றுவிகிதம், அதாவது ஏற்றுமதி விகிதத்தில் இறக்குமதியின் விலை, சீர்திருத்தம் அடைந்த நேரத்தில், ஏற்பட்டது. இறக்

குமதிப் பொருட்களின் செலவுக்கணக்கு, எதிர்பாராத ஓர் மேல் மட்டத்திற்கு செங்குத்தாக உயர்ந்தமையே இதற்கு முக்கிய காரணமாகும். இவ்வேற்றம் 1959ம் ஆண்டில் கடைசிக் காற்பகுதியிலேதான் மிகவும் குறிப்பிடும்படியாகக் காணப்பட்டது.

புற நாட்டு வியாபாரத்தில் ஏற்பட்ட இந்த ஆக உயர்ந்த நட்டம்தான், இலங்கையினது மேல் வாரியான சென்மதி நிலுவை நிலையில், 1959ம் ஆண்டு உண்டான சீர்கேட்டிற்கு வழிகாட்டிய பிரதான காரணியாகும். இதன் பயனாக வெளிநாட்டு ஒதுக்கு நிதியின் நிலைமை மேலும் பாதிக்கப்பட்டது. இந்த வருடத்தில், வெளிநாட்டுச் சொத்து 8830 இலட்சம் ரூபாயில் இருந்து 6890 இலட்சம் ரூபாய்க்கு வீழ்ச்சியடைந்தது.

அந்நிய நாணய ஒதுக்கு நிதியில் இழப்பு நேர்ந்த போதிலும், நிலையான கட்டுப் பணங்களிலும் சேமிப்புகளிலும் உயர்ச்சி ஏற்பட்ட போதிலும், மொத்தப் பண நிரம்பல் 1959ம் ஆண்டில் விரிவடைந்தது. இந்த விரிவுக்கு அரசாங்கத்துறையின் பண இயக்கங்களே முக்கிய காரணமாக இருந்தன. 1958–1959ம் ஆண்டின் பெரிய வரவு செலவுத் திட்டக்குறையின் பயனாக மகா வங்கியிடம் இருந்து அரசாங்கம் கணிசமான முறையில் கடன் பெறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இலங்கையின் பொருளாதாரச் சூழ்நிலையில், குவிகின்ற வரவு செலவு திட்டக்குறைக்கு நிதியீட்டம் செய்தல், உள்நாட்டு விலைகளை அவ்வளவாகத் தாக்காது, இறக்குமதிப் பொருட்களின் கேள்வியையும் அதனால், நாட்டின் புறப் பொருளாதார நிலையில் ஏற்படும் விளைவுகளையுமே தாக்கியது.

திட்டமிடப்பட்ட பொருளாதார அபிவிருத்தி உண்மையான முன்னேற்றத்தை அடையுமுன்பு, கூடுகிற வரவு செலவுத்திட்டக்குறை தற்போதைய அளவை அடைந்தது மிகவும் கவலையை உண்டாக்கியது. ஏற்றுமதி வருமான உயர்ச்சியுடனும், உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புடனும், இலங்கையினது மொத்த தேசிய உற்பத்தி, உண்மை நியதியின்படி, 1959ம் ஆண்டில் அடக்கமான முறையில் உயர்ந்தது. ஆயினும் குடிசனத் தொகையின் வளர்ச்சியைப் பொருட்படுத்தி நோக்கினால், இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதம், 1959ம் ஆண்டில் மிகவும் தாழ்வானது என்று கணித்துக் கொள்ளலாம்.

## (ஆ) தேசிய உற்பத்தியும் வருமானமும்

1959ம் ஆண்டுத் தேசிய மொத்த உற்பத்தி, நடைமுறை விலைக்கொள்விலையின்படி 56770 இலட்சம் ரூபாயென தற்காலிகமாக, மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை முந்தைய வருடத்திலும் பார்க்க, பண நியதியின்படி 4·8 சத வீதத்தாலும், உண்மையான நியதியின்படி 3·8 சத வீதத்தாலும், அதிகரிப்பு உடையதாகும். ஆனால் குடிசனத் தொகையின் 2·5 சதவீத அதிகரிப்புக்கு இடம் விட்டுக்கணித்தால், உண்மையான உற்பத்தி சராசரி ஆளுக்கு 1·3 சதவீதமாக உயர்ந்துள்ளது.

1959ம் ஆண்டில் ஏற்பட்ட இந்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி, உள்நாட்டு உபயோகத்திற்கென ஆக்கப்பட்ட பொருட்கள், சேவைகள், முதலியனவற்றின் அதிகரிப்பையே பெரும்பாலும் பிரதிபலித்தது. மேலும் முதலீட்டு விகிதத்தில் ஏற்பட்ட ஏற்றமும், ஏற்றுமதி வருமானத்தில் உண்டான ஒரு சிறு அதிகரிப்பும், மொத்ததேசிய உற்பத்தியின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தன. கடந்த மூன்று ஆண்டுகளில் காணப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் பிரதான அம்சங்களின் நடமாட்டங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**நடைமுறைச் சினைக்கொள்விலைகளின்படியும், நிலையான 1956ம் ஆண்டுச் சினைக்கொள்விலையின் படியும் கணக்கிடப்பட்ட மொத்தத்தேசிய உற்பத்தி.**

அட்டவணை 1. இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | நடைமுறை விலையின்படி | | நிலையான விலையின்படி | |
|---|---|---|---|---|
| | 1958* | 1959 | 1958* | 1959 |
| 1. ஏற்றுமதியாகும் உள்நாட்டுப் பொருட்கள் | 1,61,30 | 1,64,80 | 1,71,80 | 1,68,20 |
| 2. உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டு பாவிக்கப் பட்ட பொருட்கள் .. .. | 1,46,30 | 1,53,20 | 1,36,90 | 1,44,60 |
| 3. வர்த்தகம் .. .. .. .. .. | 40,20 | 43,40 | 34,00 | 36,70 |
| 4. போக்குவரத்து .. .. .. .. | 26,70 | 27,70 | 25,50 | 26,40 |
| 5. உத்தியோகச் சேவைகள் / வீட்டுச் ,, / சொந்தச் ,, .. .. .. | 42,80 | 44,20 | 37,90 | 40,10 |
| 6. அரசாங்கம் .. .. .. .. .. | 63,40 | 66,20 | 60,50 | 63,40 |
| 7. மூலதன அபிவிருத்தி .. .. .. | 51,20 | 57,20 | 48,90 | 54,20 |
| 8. வாடகை .. .. .. .. .. | 12,40 | 13,10 | 11,80 | 12,50 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **5,44,30** | **5,69,80** | **5,27,30** | **5,46,10** |
| 9. பிறநாட்டிலிருந்து சினை வருமானம் .. | 5,00 | 4,80 | 5,20 | 5,00 |
| **மொத்த உற்பத்தி** .. .. .. .. | **5,49,30** | **5,74,60** | **5,32,50** | **5,51,10** |
| 10. நீக்கப்பட வேண்டிய, வெளியே கொடுத்த சினை வருமானம் .. .. .. .. | 7,70 | 6,90 | 8,30 | 7,00 |
| **மொத்த தேசிய உற்பத்தி** .. .. .. .. | **5,41,60** | **5,67,70** | **5,24,20** | **5,44,10** |

*1958ம் ஆண்டிற்குரிய எண்தொகை திருத்தியமைத்தவை இவை கடந்த ஆண்டில் வெளியிடப் பட்ட ஆண்டு அறிக்கையின் தற்காலிகமான எண்தொகைக்குப் பதிலாக இடம்பெற்றுள்ளன.

**மூலம்.** குடிசனத்தொகை மதிப்பு, புள்ளி விபரத்திணைக்களம், இலங்கை மகா வங்கி.

**ஏற்றுமதிகள்.**

மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்றுமதிகளாற் கிடைத்த வருவாய் 1959ம் ஆண்டு 29·0 சதவீதமாகவும், 1958ம் ஆண்டு 29·4 சதவீதமாகவும், 1956ம் ஆண்டு 32·0 சதவீதமாகவும் இருந்தது.

1958ம் ஆண்டிலும் பார்க்க 1959ம் ஆண்டில் ஏற்றுமதிகளின் பெறுமதி 2·2 சதவீதம் உயர்ந்ததாய் இருந்தது. ஆனால் அவற்றின் மொத்த அளவு 2·1 சதவீதம் குறைந்ததாகும்.

1959ம் ஆண்டு 4130 இலட்சம் இறாத்தல் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை மொத்தம் 3840 இலட்சம் இறாத்தலாகும். இது 1958ம் ஆண்டின் ஏற்றுமதியிலும் பார்க்க 7 சதவீதத்தால் குறைந்தது ஆகும். இதன் பெறுமதி 1958ம் ஆண்டு கிடைத்ததிலும் பார்க்க 8 சதவீதத்தால் தாழ்ந்தது ஆகும்.

1958ம் ஆண்டில் 2240 இலட்சம் இறாத்தலாக இருந்த இறப்பர் உற்பத்தி, 1959ம் ஆண்டில் பெரிதும் வீழ்ச்சியடைந்து, 2050 இலட்சம் இறாத்தலானது. இவ்வாண்டில் ஏற்றுமதியான இறப்பரின் அளவு 2060 இலட்சம் இறாத்தலாகும். 1958ம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவிலும் இது சிறிது குறைந்தது. ஆயினும், இறப்பரின் விலை உயர்ந்ததன் பயனாக இதன் ஏற்றுமதிப் பெறுமானமும் முந்திய ஆண்டிலும் பார்க்க 16 சதவீதத்தால் உயர்ந்து, 2980 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது.

1959ம் ஆண்டுத் தெங்கு உற்பத்தி, 23000 இலட்சம் காய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இஃது முந்திய ஆண்டு உற்பத்தியிலும் 13 சதவீதத்தால் கூடியதாகும். கொப்பரா நியதிப்படி பார்த்தால், ஏற்றுமதி செய்யப்பட்ட மூன்று பிரதான தெங்குப் பொருட்களின் அளவு முந்திய வருடத்திலும் பார்க்க 28 சதவீத உயர்ச்சியைக் காட்டியுள்ளது. ஆயினும் இவற்றால் தேறிய பெறுமானமான 2430 இலட்சம் ரூபாய்கள், 1958ம் ஆண்டிலும் பார்க்க 49 சதவீதத்தால் கூடியது ஆகும்.

**உள்நாட்டு மொத்த உற்பத்தியின் கைதொழில் மூலம்.**

கைத்தொழில் துறைகள் ஒவ்வொன்றின் மூலமாகவும் கிடைக்கும் உள்நாட்டு மொத்த உற்பத்தியையும் பிரித்துக் கணித்து ஆராயும் பொழுது நாட்டின் பொருளாதாரத்தில் உள்ள வெவ்வேறு பகுதிகளின் உறவு முக்கியத்துவம் வெளிப்படுகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளின் மேற்படி விபரங்களை கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காண்க. நாட்டின் பொருளாதாரப் பொது அமைப்பு பற்றி பயனுள்ள செய்திகளை இந்த அட்டவணை தருவதோடு, இவ்வமைப்பில் ஏற்பட்ட சில முறைமாற்றங்களையும் காட்டுகின்றது.

**கைத்தொழில் மூலப்பாகுபாட்டின்படி உள்நாட்டு மொத்த உற்பத்தி 1956-59 சினைக்கொள்விலைகளின்படி.**

*அட்டவணை 2.*

| கைத்தொழில் | 1956 | | 1957 | | 1958 | | 1959 | | 1958 முதல் 1959 வரை ஏற்பட்ட சதவீத மாற்றம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இலட்சம் ரூபாய்கள் | சதவீதம் | இலட்சம் ரூபாய்கள் | சதவீதம் | இலட்சம் ரூபாய்கள் | சதவீதம் | இலட்சம் ரூபாய்கள் | சதவீதம் | |
| **முதனிலையிலுள்ளது** | | | | | | | | | |
| 1. விவசாயமும் மீன் பிடித் தொழிலும்* .. .. | 2,55,20 | 50·64 | 2,53,50 | 49·32 | 2,63,70 | 48·45 | 2,70,90 | 47·54 | 2·73 |
| **இரண்டாந்தரமானது** | | | | | | | | | |
| 2. சுரங்கத் தொழிலும், பார்க்குழித்தொழிலும் .. | 1,70 | 0·34 | 1,70 | 0·33 | 1,00 | 0·18 | 1,50 | 0·26 | 50·00 |
| 3. தயாரிப்புக்களும் கைப் பணிகளும் .. | 26,10 | 5·18 | 28,10 | 5·47 | 32,30 | 5·94 | 34,40 | 6·04 | 6·50 |
| 4. கட்டட ஆக்கம் .. | 45,90 | 9·11 | 45,10 | 8·77 | 49,60 | 9·11 | 53,90 | 9·46 | 8·67 |
| **மூன்றுந்தரமானது** | | | | | | | | | |
| 5. போக்குவரத்து, தந்தி, தபால், செய்திஅறிவிப்பு | 30,60 | 6·07 | 32,70 | 6·36 | 34,20 | 6·28 | 36,20 | 6·36 | 5·85 |
| 6. மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும் .. | 41,40 | 8·22 | 43,10 | 8·39 | 48,20 | 8·86 | 51,60 | 9·05 | 7·05 |
| 7. குடியிருப்புகளின் உடைமை | 10,80 | 2·14 | 12,50 | 2·43 | 12,40 | 2·28 | 13,10 | 2·30 | 5·65 |
| 8. அரசாங்க நிர்வாகமும், பாதுகாப்பும் .. .. | 27,30 | 5·42 | 28,60 | 5·56 | 28,70 | 5·27 | 28,90 | 5·08 | 0·70 |
| 9. சேவைகள் | | | | | | | | | |
| (அ) அரசாங்க சமூகசேவைகள் .. .. | 25,70 | 5·10 | 27,80 | 5·41 | 31,40 | 5·77 | 34,90 | 6·12 | 11·15 |
| (ஆ) ஏனையவை .. .. | 39,20 | 7·78 | 40,90 | 7·96 | 42,80 | 7·86 | 44,40 | 7·79 | 3·74 |
| **உள்நாட்டு மொத்த உற்பத்தி.** | **5,03,90** | **100·00** | **5,14,00** | **100·00** | **5,44,30** | **100·00** | **5,69,80** | **100·00** | **4·68** |

மூலம். இலங்கை மகா வங்கி.

*மறு பக்கம் பார்க்க.

**விவசாயம்:** 1958ம் ஆண்டு விவசாயத்துறையில் 26370 இலட்சம் ரூபாய்களாக இருந்த உற்பத்தி, 1959ம் ஆண்டு 27090 இலட்சம் ரூபாய்களுக்கு, 2.7 சதவீதத்தால் உயர்ந்தது. இவ்வுயர்ச்சி பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களின் விலையேற்றத்தாலேயே ஏற்பட்டது. பயிர்ச் செய்கைக்காரர் வாங்கிய உற்பத்தி ஆக்கச்சாதனங்களின் விலை, மேற் கூறப்பட்ட விலையேற்றத்திலும் தாமதமாகவே உயர்ந்தது.

1958ம் ஆண்டு உற்பத்தியான நெல் என்றும் இல்லாத அளவான 3660 இலட்சம் புசல்களாகும். 1959ம் ஆண்டில் விளைந்த நெல், தற்காலிக மதிப்பீட்டின்படி 10 இலட்சம் புசல்களால் வீழ்ச்சியடைந்ததாக தெரிகிறது. பெரும்போக நெல் விளைவு 212 இலட்சம் புசல்களிலிருந்து 216 இலட்சம் புசல்களுக்கு சிறிது அதிகரித்தது. ஆனால் சிறுபோக நெல் விளைவு 154 இலட்சம் புசல்களில் இருந்து, 142 இலட்சம் புசல்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

**கைத்தொழில்களும் கைப்பணிகளும்:** 1956ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 1959ம் ஆண்டின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில், கைத்தொழில் கைப்பணிகள் முதலியவற்றின் பங்கு 0.86 சதவீத உயர்ச்சியைக் காட்டுகின்றது. இந்த நான்கு வருடங்களிலும் சராசரி வருடாந்த வளர்ச்சி விகிதம் முழு நியதியின்படி 7.2 சதவீதமாகும்.

ஆயினும் கைத்தொழிற்றிணைக்களத்தால் தொகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திக் குறிகாட்டியின்படி, 1958ம் ஆண்டு கைத்தொழில் உற்பத்தி அளவு முந்திய வருடத்திலும் பார்க்க 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததென அறியக்கிடக்கிறது. ஆனால் மேற்படி கைத்தொழில் உற்பத்திக்குறிகாட்டி உள்நாட்டு மொத்த உற்பத்திப் பாகுபாட்டில் பிறிதாகக் காட்டப்பட்ட சுரங்கத்தொழில், பார்க்குழித் தொழில் என்பனவற்றின் கீழ் தொகுக்கப்பட்ட காரீயம், உப்பு, அப்பிரகம் முதலியனவற்றையும் அடக்கியுள்ளது என்பது கவனிக்கப்படல் வேண்டும். இவைகள் அல்லாத பிற கைத்தொழில்களின் உற்பத்தி 3 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 1957ம் ஆண்டு மார்கழி மாத வெள்ளப் பெருக்கும், தொழிற் குழப்பமும், வகுப்புக்கலவரங்களுமே இதற்கு முக்கிய காரணங்களாகும்.

**சேவைகள்:** அரசாங்க, தனிப்பட்டோர் சேவைகளிருந்து தோன்றும் இணைந்த வருமானம் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 13 சதவீதமாக அமைகின்றது. முந்திய ஆண்டிலும் பார்க்க 1959ம் ஆண்டில் சமூக சேவைகளுக்காக அரசாங்கம் செய்த செலவு 11 சதவீதத்தாலும் தனிப்பட்டோர் துறை சேவைகளிலிருந்து தோன்றும் வருமானம் 3.7 சதவீதத்தாலும், உயர்ந்தது. ஏற்றுமதி இறக்குமதிகள் அதிகரித்ததன் பயனாக தனிப்பட்டோர் துறையில் பங்கீட்டுச்சேவைகளின் பொருளாதார தொழிற்பாடு விருத்தியடைந்தது.

**மொத்த தேசியச் செலவு.**

மொத்த தேசியச் செலவு பின்வரும் பிரதான அம்சங்களைக் கொண்டுள்ளது :– நுகர்ச்சி (அரசாங்கத்திற்குரியதும், தனிப்பட்டோர்க்குரியதும்); மொத்த மூலதன ஆக்கம்; இறக்குமதிப் பொருட்கள் கழிக்கப்பட்ட ஏற்றுமதிப் பொருட்களும் சேவைகளும்; பிறநாட்டிலிருந்து வரும் நிகர சினை வருமானங்கள்.

---

*தேயிலை, இறப்பர், தயாரிப்பின் விளைவாக கைத்தொழிலுக்குச் சேரும் வருமானமும் அடங்கும். பொருளாதார தொழிற்பாடுகளின் மேற்படி பாகுபாடு, ஐக்கிய நாடுகளின் நியம, சர்வதேசக் கைத்தொழில் பாகுபாட்டிற்கு இணங்க அமைந்தது. ஆனால், கிடைக்கக்கூடிய தரவுகளின் அருமை காரணத்தால், தேயிலை, இரப்பர் விடயத்தில், விவசாயத்திற்குச் சேரும் பெறுமானத்தையும், கைத்தொழிலுக்குச் சேரும் பெறுமானத்தையும் பிரித்து அறிதல் சாத்தியமாகாது. இந்த அளவிற்கு விவசாயத்திலிருந்து உற்பத்தியாகும் வருமானம் கூடியதாக மதிக்கப்பட்டுள்ளது.

**நுகர்ச்சி:** 1959ம் ஆண்டு சிலைக் கொள்விலையின்படி தனிப்பட்டோரின் நுகர்ச்சிச் செலவு 40620 இலட்சம் ரூபாய்கள் ஆகும். இது 1958ம் ஆண்டிலிருந்து 5.1 சதவீதத்தால் கூடியது ஆகும். மொத்த தேசியச் செலவில், தனிப்பட்டோர் நுகர்ச்சியின் பங்கு 1957ம் ஆண்டு 75 சதவீதமும், 1958ம் ஆண்டு 73.8 சதவீதமும், 1959ம் ஆண்டு 73.9 சதவீதமும் ஆகும்.

1959ம் ஆண்டு அரசாங்க நுகர்ச்சி, பண நியதியின்படி 6.4 சதவீதத்தால் 8830 இலட்சம் ரூபாய்களுக்கும், மெய்யான நியதியின்படி 6.2 சதவீதத்தால் 8410 இலட்சம் ரூபாய்களுக்கும் உயர்ந்தது. மொத்த தேசியச் செலவில் அரசாங்கத்தின் பங்கு உறுதியான முறையில் மேலேற்றம் அடைந்தது. இப்பங்கு 1957ம் ஆண்டு 13.8 சதவீதமாக இருந்து, 1958ம் ஆண்டு 15.3 சதவீதமாகவும், 1959ம் ஆண்டு 15.5 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.

**மூலதன ஆக்கம்:** சிலைக் கொள்விலையின்படி கணக்கிடப்பட்ட மூலதன ஆக்கம் தற்காலிகமாக 8120 இலட்சம் ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது 1958ம் ஆண்டிலும் பார்க்க 17.7 சதவீத ஏற்றத்தைக் காட்டுகின்றது. மெய்யான நியதியின்படி இவ்வதிகரிப்பு 17.9 சதவீதம் ஆகும். மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக நோக்கும் பொழுது, மொத்த முதலீடு, 1958ம் ஆண்டு இருந்த 12.8 சதவீதத்திலிருந்து,1959ம் ஆண்டு 14.3 சத வீதத்திற்கு அதிகரித்துள்ளது.

1959ம் ஆண்டின் சகல மொத்த மூலதன ஆக்கத்தில் 58 சதவீதம் அரசாங்கத்திலும், 42 சதவீதம் தனிப்பட்டோர் துறையிலும் தோன்றியது. கட்டட ஆக்கவேலைகள் 1958ம் ஆண்டு 64 சதவீதமாகவும், 1959ம் ஆண்டு 68 சதவீதமாகவும் இருந்தன. அரசாங்கக் கடன், வரிச்சலுகைகள் முதலிய ஆதரவுகளைப்பெற்ற கட்டட தொழிற்பாடுகள் (ஆக்கவேலைகள்) 1959ம் ஆண்டில் முன் என்றும் இல்லாத உயர்ச்சியை அடைந்தன. முந்திய வருடத்திலும் பார்க்க, போக்குவரத்துப் பகுதியில் போடப்பட்ட புது முதலீடுகள், கணிசமான அளவில் கூடியது. அரசாங்கமும் முன்பிருந்ததிலும் பார்க்க மிக விரைவான விகிதாசார முறையில் அதிக முதலீடு செய்தது. கட்டட தொழிற்பாடுகளும் அடங்கியுள்ள பொருளாதார சேவைகளின் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பின் பயனாகவே, அரசாங்க மூலதன ஆக்கத்தில் இம் மிகப் பெரிய உயர்ச்சி காணப்பட்டது. தேசிய உற்பத்தியின் பிரதான அம்சங்களில் ஏற்பட்ட மெய்யான, சராசரி ஆளுக்குரிய மாற்றங்களைப் பின் வரும் அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது.

**தேசிய மொத்த உற்பத்தியில் சராசரி தனியாளுக்குரிய மாற்றங்கள்**

**(1956ம் ஆண்டு விலையின்படி)**

**1956 = 100**

அட்டவணை 3.

| குறிகாட்டிகள் | 1958 | 1959 |
|---|---|---|
| 1. குடிசனத்தொகை.. .. .. .. .. .. .. | 105·1 | 107·7 |
| 2. சராசரி ஆளுக்குரிய சொந்த நுகர்ச்சி .. .. .. .. | 105·8 | 108·5 |
| 3. ,, ,, மொத்த மூலதன ஆக்கம் .. .. | 90·1 | 103·7 |
| 4. ,, ,, பண்டங்கள், சேவைகளின் ஏற்றுமதிகள் | 95·2 | 96·2 |
| 5. ,, ,, பண்டங்கள், சேவைகளின் இறக்குமதிகள் | 106·2 | 118·0 |
| 6. ,, ,, விளைவு .. .. .. .. .. | 99·8 | 101·1 |

**மூலம்:** இலங்கை மகா வங்கி.

சராசரி ஆளுக்குரிய மெய்யான விளைவின் வளர்ச்சி விகிதம் 1958ம் ஆண்டு இருந்த 1.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 1959ம் ஆண்டு 1.3 சதவீதமாக உள்ளது. ஏற்றுமதிகளின் விரிவு விகிதத்தில் ஒரு சிறிய ஏற்றம் காணப்பட்டது. சராசரி ஆளுக்குரிய உண்மையான நுகர்ச்சி 2.6 சதவீதத்தால் உயர்ந்தது. ஆனால் இது குறிக்கப்பட்ட வருமானத் தொகுதிகளின் உண்மையான நுகர்ச்சி மாதிரியை அளவிடுகின்றதன்று. சராசரி ஆளுக்குரிய இறக்குமதிகள் கிட்டத்தட்ட 11.1 சதவீதத்தால் அதிகரித்தன. மொத்த மூலதன ஆக்கம், முந்திய வருடத்திலும் பார்க்க 15 சதவீத உயர்ச்சியைக் காட்டியது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

## (இ) வெளி நாட்டு வர்த்தகம்.

### 1. பொதுப்படையான போக்கு.

1959ம் ஆண்டு இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் மேலும் விரிவடைந்தது. ஏற்றுமதிகளின் பெறுமானம் 17540 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. இது கடந்த பத்து ஆண்டுகளின் சராசரியிலும் பார்க்க 7 சதவீதம் கூடியதாகும். ஆனால் இறக்குமதிகளின் பெறுமானம் கடந்த பத்து ஆண்டுகளின் சராசரியைக் காட்டிலும் 33 சதவீதம் மேலதான 20050 இலட்சம் ரூபாய்க்கு உயர்ந்தது. இதன் விளைவாக எக்காலத்திலும் இல்லாத 2510 இலட்சம் ரூபாய்கள் எதிரிடையான வியாபார மீதி ஏற்பட்டது.

மகா வங்கியின் வியாபாரக் குறிகாட்டி அளவையின்படி, இறக்குமதிகளின் மொத்த அளவு 12 சதவீதம் அதிகரித்ததே இந்தச் செலவின் உயர்வுக்கு முற்றும் காரணமாக இருந்தது. இறக்குமதிகளின் சராசரி விலைமட்டம் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உணவுப் பொருட்களின் கை இருப்புக்களை உயர்த்தவேண்டும் என்ற அரசாங்கக் கொள்கையின் விளைவாக அரிசி, கோதுமை மா போன்ற பொருட்கள் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டன. அசாதாரணமாக கீழ்மட்டத்திற்கு வீழ்ந்த கை இருப்புகளை மீண்டும் நிரப்புவதற்காக எழுந்த தேவை காரணமாக ஏராளமான சிமெந்து, உரம் முதலியன இறக்குமதி செய்யப்பட்டன. வீதிப் போக்குவரத்து அமைப்பில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள், பதில் வைப்புகள் காரணமாக சிலவகை போக்குவரத்துச் சாதனங்கள், ஏனைய சாதனங்கள் முதலியனவற்றின் இறக்குமதிகளில் அதிகரிப்பு ஏற்பட்டது. அரசாங்கச் செலவால் உண்டாக்கப்பட்ட மேலதிகமான வருமானங்களும் நுகர்ச்சிப் பண்டங்களின் இறக்குமதியை உயர்த்துவதற்கு ஏதுவாயிருந்தது. கடந்த ஆண்டுகளில் தரமான அளவில் உயர்ந்து கொண்டுவந்த மூலதனப் பொருட்களின் இறக்குமதி 1959ம் ஆண்டில் 35 சதவீதத்தால் உயர்ந்தது. 1958ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 1959ம் ஆண்டில் இறக்குமதிகளின் பெறுமதி சுமார் 2880 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. ஆனால் ஏற்றுமதிகளின் பெறுமானம் ஆக 430 இலட்சம் ரூபாய்களால் மாத்திரம் உயர்ந்தது.

1959ம் ஆண்டு இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளின் சராசரி விலை 4 சதவீதத்தால் உயர்ந்தது. இரப்பர் விலை 1958ம் ஆண்டு கிடைத்த விலைமட்டத்திற்கு மேல் 16 சதவீதத்தால் உயர, தெங்கு உற்பத்திப் பொருட்களின் விலை 18 சதவீதத்தால், கடந்த எட்டு ஆண்டுக்காலத்தில் உயராத ஒரு மிக உயர்ந்த மட்டத்திற்கு ஏறியது. ஆனால் தேயிலையின் சராசரி ஏற்றுமதிவிலை 1 சதவீதத்தால் சிறிது வீழ்ச்சியடைந்தது.

1959ம் ஆண்டு இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளின் சமமற்ற இயக்கம், விலையில் மட்டுமன்றி, அளவிலும் காணப்பட்டது. தெங்கு உற்பத்திப் பொருட்களின் அளவு 24 சதவீதத்தால் அதிகரிக்க, இரப்பர் ஏற்றுமதிகள், 1958ம் ஆண்டு அடைந்த மட்டத்திலிருந்து சிறிது குறைந்தன. ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு ஏறக்குறைய 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதன் பெறுமதியில் 860 இலட்சம் ரூபாய்கள் குறைவு ஏற்பட்டது

தேயிலை, இலங்கையின் வெளிநாட்டுச் சம்பாத்தியத்தில் முதலிடம் வகிக்கிறது. வியாபாரப்பண்டங்களின் ஏற்றுமதியால் வரும் கடல் கடந்த வருமானத்தில், ஐந்தில் மூன்று பங்கை தேயிலை சம்பாதித்துக் கொடுக்கின்றது. ஆனால் சர்வதேச வர்த்தகத்தில் பங்கு கொள்ளும் முதலான உற்பத்திப் பொருட்களைப் போல அல்லாது, தேயிலை ஏனைய கைத்தொழில் நாடுகளின் பொருளாதார இயக்கத்தின் திடீர் மாற்றங்களால் பெரிதும் பாதிக்கப்படுவதில்லை. கைத்தொழில் நாடுகளின் பொருளாதார இயக்கத்தில் ஏற்படும் மந்தத்தைத்தொடர்ந்து நிகழும் ஏனைய பண்டங்களின் விலை வீழ்ச்சியின் காரணமாக எழும் பிரதிகூலமான விளைவுகளில் இருந்து இலங்கையைக் காப்பாற்ற ஏற்றுமதித்துறையில் தேயிலை வகிக்கும் உன்னத ஸ்தானமும், அதன் கேள்வியினெகிழ்ச்சியின்மையும் பெருமளவில் உதவி புரிகின்றன.

ஆனால் ஏனைய நாடுகளில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படும் வேளைகளில் கூடுதலான வருமானத்தை பெறுதற்கும் இது தடையாய் இருப்பது 1959ம் ஆண்டின் அனுபவத்தால் தெரிகிறது.

1959ம் ஆண்டு இறக்குமதியின் விலைமட்டம் 1 சதவீதம் குறைந்ததாலும், ஏற்றுமதிகளின் விலைமட்டம் உயர்ந்ததாலும், வர்த்தக மாற்றுவிகிதம் இலங்கைக்குச் சாதகமாயிற்று. அதாவது ஏற்றுமதிப் பொருட்களால் இறக்குமதிப் பொருள்களுக்கு பணம் இறுக்கும் சக்தி, மகா வங்கி வியாபாரக் குறிகாட்டியின் அளவைப்படி, 5 சதவீதத்தால் உயர்ந்தது.

**2. ஏற்றுமதிகள்.**

**தேயிலை:** 1959ம் ஆண்டு உலகத்தேயிலை உற்பத்தி சிறிது குறைந்தது. உலக ஏற்றுமதிகள் அதிலும் பார்க்கக் கூடிய அளவில் குறைவுற்றன. அதே நேரத்தில் உலக தேயிலை இறக்குமதிகளில் 49 சதவீதத்தை உட்கொள்ளும் பிரித்தானியா நாட்டின் தேயிலை இறக்குமதி 1959ம் ஆண்டு 700 இலட்சம் இருத்தல்களால் வீழ்ச்சியுற்றது. பிரித்தானிய நாடு இறக்குமதி செய்யும் தேயிலையின் அளவில் ஏற்றவிறக்கம் ஏற்படுகிறது அசாதாரணமானது அன்று. எனவே இவ் வீழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு அந்நாட்டுத் தேயிலை நுகர்ச்சியில் ஓர் குறைவு ஏற்படும் என்று சொல்வதற்கு இப்பொழுது முடியாது.

1959ம் ஆண்டு, கொழும்புத் தேயிலை ஏலத்தில் சராசரி ஆண்டு விலை ஒரு இருத்தலுக்கு 12 சதத்தால் அதிகரித்தது. ஆனால் இந்த விலையேற்றம் அநேகமாக 1959ம் ஆண்டு, ஆனி மாதம் மாற்றி அமைக்கப்பட்ட ஏற்றுமதித் தீர்வைகளின் பயனாகவே ஏற்பட்டது. குறைந்த விலைவாசியைச் சேர்ந்த பலரகப்பட்ட தேயிலைகளின் தீர்வை ஒரு இருத்தலுக்கு ஏறக்குறைய 35 சதங்களால் குறைக்கப்பட்டது. இக்குறைக்கப்பட்ட தீர்வையின் பயனாக அவற்றின் விலை உயர்ந்தது. முன்னரே கூறியபடி 1959ம் ஆண்டுத் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை சிறிது வீழ்ச்சியுற்றது.

**ஏற்றுமதி செய்த தேயிலையின் அளவும் விலைகளும்.**

அட்டவணை 4.

| ஆண்டு | ஏற்றுமதி | | கொழும்பு ஏல, சராசரி விலை (ஒரு இருத்தலுக்கு) | | | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை இலட்சம் இருத்தல் | ஏற்றுமதி விலை. ஒரு இருத்தல் ரூ. ச. | உயர்ந்த பிரதேச ரூ. ச. | மத்திய பிரதேச ரூ. ச. | தாழ்ந்த பிரதேச ரூ. ச. | சகலவகையான தேயிலை *சராசரி ரூ. ச. |
| 1955.. .. .. | 36,22 | 3·30 | 2·34 | 2·04 | 2·40 | 2·24 |
| 1956.. .. .. | 34,81 | 3·00 | 2·50 | 1·96 | 1·88 | 2·16 |
| 1957.. .. .. | 36,77 | 2·78 | 2·05 | 1·61 | 1·88 | 1·86 |
| 1958.. .. .. | 41,08 | 2·75 | 2·11 | 1·51 | 1·48 | 1·73 |
| 1959.. .. .. | 38,35 | 2·72 | 2·13 | 1·69 | 1·67 | 1·85 |

**மூலம்:** இலங்கைச் சுங்கபுள்ளி விபரம்.
கொழும்பு தேயிலை தரகர் சங்கம்.

**இரப்பர்:** 1956ம் ஆண்டுக்குப்பின் தொடர்ந்து வீழ்ச்சியுற்று வந்த இரப்பர் விலைவாசிகள் 1958ம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து அதிகரிக்கத் தொடங்கின. அந்த ஆண்டு மார்கழி மாத முடிவில் சிறு தடை ஏற்பட்டதெனினும் அதன்பின் விலைவாசிகள் மிக்க ஆதாயமான மட்டத்திற்கு ஏற்றம் கண்டுள்ளது.

1959ம் ஆண்டு இரப்பருக்கு மிகவும் அநுகூலமான விலைகள் கிடைத்தபோதிலும், இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட இரப்பரின் அளவு, கடந்த ஐந்து ஆண்டு காலத்தின் சராசரியிலும் பார்க்க 8 சதவீதத்தால் குறைந்தது. சில வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட மாற்று நடுதல் இயக்கங்களும், பிரதிகூலமான பருவநிலைகளுமே இதற்குக் காரணங்களாக இருந்தன. 1959ம் ஆண்டு இலங்கை ஏற்றுமதி செய்த 2060 இலட்சம் இறாத்தல் இரப்பர், 1958லிலும் பார்க்க 1 சதவீதத்தால் குறைந்தது ஆகும்.

விலைவாசிகளின் உயர்ச்சியைத் தொடர்ந்து ஏற்றுமதித் தீர்வையில் அதிகரிப்பு ஏற்பட்டது. விலையேற்றத்தின் விளைவாக உற்பத்தியாளர்களுக்குக் கிடைத்த கூடிய வருமானங்களில் சிலவற்றை அரசிறைக்குச் சேர்க்கும் நோக்கத்துடன் இரப்பர் ஏற்றுமதித் தீர்வை படிப்படியாக உயர்த்தப்பட்டது.

**தெங்கு உற்பத்திப்பொருட்கள்:** 1959ம் ஆண்டு உலகத்தில் தெங்கு உற்பத்திப் பொருட்களுக்கு பொதுவான தட்டுப்பாடு ஏற்பட்டது. பிரதிகூலமான பருவநிலை காரணமாக, 1958ம் ஆண்டு தெங்குப் பொருட்களின் உற்பத்தி பெரிதும் வீழ்ச்சியடைந்தது. 1959ம் ஆண்டு இஃது மேலும் குறைந்தது. 1959ம் ஆண்டு முற்பகுதியில் விலைவாசிகள் அதிவிரைவாக உயர்ந்தன. ஆனால் ஐக்கிய அமெரிக்கா, தான் ஒதுக்கிவைத்திருந்த தேங்காய் எண்ணைக் கையிருப்பில் ஒரு பகுதியை உலக வர்த்தகத்திற்கு விடுவிக்க முன்வந்ததன் பயனாக தேங்காய் எண்ணெயின் விலைவாசிகளில், ஆனி மாதம் முதல் பெரிதும் வீழ்ச்சி ஏற்பட்டது.

விலைவாசியிலும் அளவிலும் அதிகரிப்பு ஏற்பட்டதன் பயனாக 1959ம் ஆண்டு இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தெங்கு உற்பத்திப் பொருட்களின் பெறுமானம் 1640 இலட்சம் ரூபாய்களில் இருந்து 2440 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது.

**பிரதான தெங்கு உற்பத்திப் பொருட்கள்—ஏற்றுமதிகள்—தொகையும் விலைகளும்.**

அட்டவணை 5.

| பொருட்கள் | 1956 | | 1957 | | 1958 | | 1959 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை 1000 அந்தர் | ஏற்றுமதி ஒரு அந்தர் விலை ரூ. ச. | தொகை 1000 அந்தர் | ஏற்றுமதி ஒரு அந்தர் விலை ரூ. ச. | தொகை 1000 அந்தர் | ஏற்றுமதி ஒரு அந்தர் விலை ரூ. ச. | தொகை 1000 அந்தர் | ஏற்றுமதி ஒரு அந்தர் விலை ரூ. ச. |
| கொப்பரு .. | 11,55 | 42·43 | 6,95 | 47·95 | 5,54 | 52·97 | 8,52 | 60·52 |
| **தேங்காய் எண்ணெ ..** | **16,98** | **58·42** | 10,81 | 62·80 | 8,87 | 69·80 | 13,89 | 84·41 |
| துருவல் தேங்காய் .. | 12,75 | 50·80 | 9,78 | 56·08 | 11,35 | 63·72 | 10,50 | 71·45 |

**மூலம்:** இலங்கைக் சுங்க புள்ளிவிபரங்கள்.

(குறிப்பு:—தெங்கு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பைத் தொடர்ந்து, நான்கு ஆண்டுகளாக மாற்றம் அடையாமல் இருந்த ஏற்றுமதித் தீர்வைகள், *1959*ம் ஆண்டு ஆடி மாதம் பத்தாம் திகதி முதல் கொப்பரு, தேங்காய் எண்ணெ, தேங்காய்த் துருவல், ஆகியவற்றின் ஒவ்வொரு தொன் நிறைக்கும் முறையே ரூ. *245*, ரூ. *185*, ரூ. *135*, ஆக உயர்த்தப்பட்டது.)

3. **இறக்குமதிகள்.**

இறக்குமதிகளின் பாகுபாடுகள் பின்வருமாறு :-

**இறக்குமதிகளின் அமைப்பு**

அட்டவணை 6.

| | பெறுமானம் இலட்சம் ரூபாய்களில் | | | மொத்த இறக்குமதியில் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1957 | 1958 | 1959 | 1957 | 1958 | 1959 |
| **உணவு, மதுபானம் குடிவகை, புகையிலை** .. .. .. | **73,60** | **71,50** | **81,20** | **40·8** | **41·6** | **40·5** |
| (அதில்) அரிசி .. .. .. | 25,50 | 23,80 | 28,30 | 14·1 | 13·9 | 14·1 |
| கோதுமை மா .. .. | 8,60 | 6,70 | 10,60 | 4·8 | 3·9 | 5·3 |
| சீனி .. .. .. .. | 8,20 | 8,70 | 7,50 | 4·5 | 5·1 | 3·8 |
| பாற்பண்ணைப் பொருட்கள் .. | 6,30 | 5,80 | 8,30 | 3·5 | 3·4 | 4·1 |
| மீன் உணவுகள் .. .. | 8,00 | 9,20 | 8,90 | 4·4 | 5·4 | 4·4 |
| கறிச் சரக்குகள் .. .. | 4,10 | 3,50 | 3,90 | 2·3 | 2·0 | 1·9 |
| **மூலப் பொருட்களும் தயாரிப்புகளும்** .. .. .. | **1,06,80** | **1,00,20** | **1,19,30** | **59·2** | **58·4** | **59·5** |
| நில எரியெண்ணைத் தயாரிப்புக்கள் .. .. .. | 20,20 | 12,50 | 13,40 | 11·2 | 7·3 | 6·7 |
| உரம் .. .. .. .. | 7,00 | 4,70 | 6,10 | 3·9 | 2·7 | 3·0 |
| சிமெந்து .. .. .. | 2,80 | 1,30 | 2,20 | 1·6 | 0·8 | 1·1 |
| இரும்பும், எஃகும் .. .. | 7,00 | 6,80 | 8,50 | 3·9 | 4·0 | 4·2 |
| இயந்திரத் தொகுதி .. .. | 8,10 | 8,90 | 10,70 | 4·5 | 5·2 | 5·3 |
| ஆடைவகைகள் .. .. | 14,70 | 16,00 | 14,70 | 8·1 | 9·3 | 7·3 |
| இரசாயனப் பொருட்கள் மருந்துவகைகள், சாயப் பொருட்கள் .. .. | 4,20 | 4,20 | 5,60 | 2·3 | 2·4 | 2·8 |
| காகிதமும், காகிதமட்டையும் | 3,40 | 2,90 | 3,40 | 1·9 | 1·7 | 1·7 |
| போக்குவரத்துச் சாதனங்கள் மோட்டார் வண்டிகள் .. | 3,40 | 3,60 | 5,00 | 1·9 | 2·1 | 2·5 |
| ஏனைய போக்குவரத்துச் சாதனங்கள் .. .. .. | 5,40 | 7,10 | 12,70 | 3·0 | 4·1 | 6·3 |
| **மொத்த இறக்குமதிகள்** .. | **1,80,40** | **1,71,70** | **2,00,50** | **100·0** | **100·0** | **100·0** |

மூலம்: இலங்கைச் சுங்கபுள்ளி விபரம்.

மகா வங்கி வர்த்தகக் குறிக்காட்டியின்படி மொத்த இறக்குமதிகளில், ஏறக்குறைய நாலில் மூன்று பங்காக விளங்கும் நுகர்ச்சிப் பொருட்கள் 6 சதவீதத்தால் அதிகரித்தன. ஆனல் இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களின் தொகை 35 சதவீதத்தால் என்றும் இல்லாத மட்டத்திற்கு உயர்ந்தது.

பிரதான நுகர்ச்சிப் பொருட்களில் ஆடை வகைகள், சீனி முதலியவற்றைத் தவிர ஏனைய பல வகை நுகர்ச்சிப் பொருட்களின் இறக்குமதியும் உயர்ந்தது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி 450 இலட்சம் ரூபாய்களாலும், கோதுமை மா 390 இலட்சம் ரூபாய்களாலும், பாற்பண்ணைப் பொருட்கள் 250 இலட்சம் ரூபாய்களாலும், ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள்* 270 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்தன.

அரிசி, கோதுமை மா, ஆகியவற்றின் இறக்குமதிகளின் அதிகரிப்பு இப்பொருட்களின் கை இருப்புக்களை உயர்த்தவேண்டும் என்ற அரசாங்கக் கொள்கையின் விளைவாகவே ஏற்பட்டது என்பது முன்னரே கூறப்பட்டது. கைத்தொழில் உற்பத்திச் சட்டத்தின் இயக்கம் காரணமாக ஆடைவகைகளின் இறக்குமதி குறைக்கப்பட்டது. இச்சட்ட நியமங்களின் படி ஒரு நிலையான விகித உள்நாட்டு உற்பத்தி ஆடைவகைகளைக் கொள்வனவு செய்யாது, சிலவித ஆடைவகைகளை இறக்குமதி செய்தல் இயலாது.

மூலதனப் பொருட்களைக் கொண்ட தொகுதியில் ஆகக்கூடிய அதிகரிப்பு, மோட்டார் வண்டிகள் அல்லாத ஏனைய போக்குவரத்துச் சாதனங்களின் இறக்குமதிகளில் ஏற்பட்டது. இது 1959ம் ஆண்டு 560 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தது. ஏனைய மூல

---

*இவற்றுள் எரியெண்ணை, மண்ணெண்ணை, மோட்டார் வண்டிகள், சப்பாத்துக்கள், திரைப்படங்கள், குடைகள், வீட்டு குளிரேற்றிகள், மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் முதலியனவும் அடங்கும்.

தனப் பொருட்களில், சில புகைவண்டிப்பாதைச் சாதனங்கள் ரூபாய் 130 இலட்சத்தாலும், மோட்டார் பஸ்களும் உபகரணங்களும் ரூபாய் 190 இலட்சத்தாலும், ஓடங்கள் படகுகள் ரூபாய் 160 இலட்சத்தாலும், உயர்ந்தன. உரம், சிமெந்து, இரும்பு, எஃகு முதலியவற்றின் இறக்குமதிகளும், முந்தைய ஆண்டு கீழ் மட்டத்தில் இருந்ததை ஈடு செய்யும் வகையில், உயர்ந்தன. மின்சார இயந்திரங்கள் தவிர்ந்த ஏனைய இயந்திரங்களின் இறக்குமதிகள் 200 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தன.

**4. வர்த்தகப் பொது அமைப்பு.**

சீனுவுக்கும் இலங்கைக்கும் இடையே வர்த்தகப் பற்றுவரவு உடன்படிக்கை முதன் முதல் 1952ம் ஆண்டு முடிவாக்கப்பட்டது. அதற்குப் பின்பு அஃது ஒழுங்காகப் புதுப்பிக்கப்பட்டு வரப்படுகின்றது. 1959ம் ஆண்டு தை மாதத்தில் நடைமுறைக்கு வந்த 1959ம் ஆண்டுப் பண்டப் பரிவர்த்தனை சம்பந்தப்பட்ட ஒப்பந்தம், இலங்கையில் இருந்து குறைந்த பட்சம் 30,000 மெட்றிக் தொன்கள் இரப்பரை சீனுவுக்கு ஏற்றுமதி செய்யப்படுதலையும், சீனுவில் இருந்த குறைந்த பட்சம் 230,000 மெட்றிக் தொன்கள் அரிசி இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுதலையும், எதிர்பார்க்கிறது. மொத்த ஏற்றுமதி இறக்குமதிகளின் தனித்தனி பெறுமானங்கள் 946 இலட்சம் ரூபாய் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இலங்கையின் அரிசித் தேவையை நிரப்பும் நாடாகவும், எங்கள் இரப்பருக்கு சந்தையாகவும், சீனு படிப்படியாக ஓர் முக்கிய ஸ்தானத்தைப் பெற்று வருகின்றது.

சோவியத் ரஷ்யாவுடனும், ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும்* செய்த வர்த்தகப் பற்றுவரவு உடன்படிக்கைகள் இந்த ஆண்டிலும் தொடர்ந்து இயங்கின.

வருடமுடிவில் போலந்துடன் ஓராண்டுக்குச் செல்லுபடியாகும் ஓர் புதிய வர்த்தகப் பற்று வரவு உடன்படிக்கையும் செய்யப்பட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பிய ஏற்றுமதிகளில் சோவியத் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பர் ஓர் உன்னத பங்காக விளங்கியது. செக்கோஸ்லவேக்கியாவிலிருந்தும், போலந்திலிருந்தும், ரூபாய் 123 இலட்சம் பெறுமதியான சீனி தயாரிக்கும் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டமையால், இவ்வர்த்தகப் பிரதேசத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மொத்தப் பெறுமானம் ரூபாய் 234 இலட்சத்திற்கு உயர்ந்தது.

## (ஈ) விலைவாசிகளும், கூலியும், வேலையும்.

**விலைவாசிகள்:**

வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியை திருத்தி அமைப்பதற்கு நிறுவப்பட்ட அரசாங்கக்குழு 1959ம் ஆண்டு ஆடி மாதம் வெளியிட்ட அறிக்கையில், வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியில் அமையும் சில பொருட்களின் முக்கியத்துவத்தை மாற்றி அமைக்க வேண்டும் எனச் சிபார்சு செய்தது. புதிய குறிகாட்டி இன்னும் கணக்கிடப்படவில்லை.

**விலை வாசிகளும் வாழ்க்கைச் செலவும்:** கொழும்புத் தொழிலாளர் வர்க்கத்தின் குடும்பச் செலவின் அடிப்படையில், குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட குறிகாட்டி, நுகர்ச்சிப் பொருட்களின் விலைவாசியில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட பின்வரும் மாற்றங்களை காட்டுகின்றது.

---

*புல்கேரியா, செக்கோஸ்லவேக்கியா, ஹங்கேரி, போலந்து, ரூமேனியா.

**கொழும்பு நுகர்ச்சிப்பொருள் விலைக்குறிகாட்டி.**

(1952=100)

*அட்டவணை 7.*

| ஆண்டு | எல்லா விடயங்களும் | உணவு (61·9%) | உடை (9·4%) | எரிபொருட்களும், விளக்கும் (4·3%) | வாடகை (5·7%) | ஏனைய வை (18·7%) | உள் நாட்டுக்கு ஆகியவை (51%) | இறக்கு மதித் தொகுதி (44%) | ஏற்று மதித் தொகுதி (5%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1957 .. | 102·8 | 104·9 | 84·4 | 97·3 | 101·5 | 106·9 | 104·9 | 91·8 | 126·8 |
| 1958 .. | 105·0 | 105·8 | 87·5 | 101·0 | 101·5 | 113·1 | 109·2 | 97·0 | 135·0 |
| 1959 .. | 105·2 | 104·7 | 92·1 | 102·4 | 101·5 | 115·3 | 108·0 | 97·1 | 153·1 |

மூலங்கள்: புள்ளிவிபர, குடிசன மதிப்புத்திணைக்களமும், இலங்கை மகா வங்கியும்.

நுகர்ச்சிப் பொருட்களின் சில்லறை விலைவாசி மட்டம் 1958ம் ஆண்டிலும் பார்க்க 1959ம் ஆண்டு 0.2 சதவீதத்தால் உயர்ந்ததென, நிலவும் நுகர்ச்சிப் பொருட்களின் விலைவாசிக் குறிகாட்டியால் அறியக்கிடக்கின்றது.

முக்கியமாக காய்கறி, பழவகைகள், உடன் மீன் முதலியனவற்றின் விலைகள் வீழ்ந்தமையின் விளைவாக, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு வகைகளின் விலைகள் 1959ம் ஆண்டு 4.1 சதவீதத்தால் குறைந்தது. ஆனால் 1958ம் ஆண்டு ஏற்பட்ட வகுப்புக கலவரங்களின் விளைவாக இப்பொருட்கள் விநியோகக் கஷ்டங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டு, அக்காலத்தில் விலை உயர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 1959ம் ஆண்டு ஏற்றுமதித் தொகுதியைச் சேர்ந்த உணவுப் பொருட்களின் விலை 13.4 சதவீதத்தால் உயர, இறக்குமதி உணவுத்தொகுதி 1.3 சதவீதத்தால் குறைந்தது. ஏற்றுமதி உணவுத் தொகுதியின் விலைமட்ட உயர்ச்சி, பிரதானமாக தெங்கு உற்பத்திப் பொருட்களின் உயர்ந்த ஏற்றுமதி விலைகள் காரணமாக ஏற்பட்டதாகும். 1958ம் ஆண்டின் மத்தியில், பங்கீட்டளவு அரிசி விலை ஐந்து சதத்தால் குறைக்கப்பட்டதன் பிரதிபலிப்பாக 1959ம் ஆண்டில் இறக்குமதித் தொகுதியைச் சேர்ந்த உணவுகளின் விலைமட்டம் குறைந்தது. கோதுமை மா, சீனி ஆகியவற்றின் விலைகள் மாற்றம் அடையாமல் இருக்க, ஏனைய இறக்குமதி உணவுகளின் விலை, குறிகாட்டியின்படி, ஏற்றம் அடைந்திருந்தும் எல்லா இறக்குமதி உணவுக்களினதும் சராசரி விலை மட்டம் வீழ்ச்சியடைந்தது.

நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் உள்ள கட்டுப்படுத்தப்படாத வாடகை தவிர்ந்த ஏனைய எல்லாப் பண்டத்தொகுதிகளுக்கும் 1957ம் ஆண்டிலிருந்து வருடாவருடம் விலை அதிகரிப்பு ஏற்பட்டது. வாடகையில் மாற்றம் காணப்படாதது எனெனில் கட்டுப்படுத்தப்பட்ட வாடகைகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டு இவ்விலைக்குறிகாட்டி தொகுக்கப்பட்டதனாலேயேயாகும். ஆடை அணிகளின் விலை மட்ட உயர்ச்சி பெரும்பாலும் இறக்குமதி விலைகளின் ஏற்றம் காரணமாகவே ஏற்பட்டது. உள்நாட்டு நெசவுத்தொழிலுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்ற அரசாங்கக் கொள்கையை தன்னுள் அடக்கிய கைத்தொழில் உற்பத்திச் சட்ட விளைவுகளின் காரணமாகவும் இது நிகழ்ந்திருக்கக் கூடும். "ஏனையவை" என்ற தொகுதியில் கிட்டத்தட்ட நாலில் மூன்று பங்கு, மதுபானம், புகையிலை முதலியனவையாகும். எனவே மதுவரி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக இவைகளின் விலைகள் ஏற்றம் அடைந்திருக்கின்றன.

**கூலி.**

கூலி விகிதம் பற்றிய குறிகாட்டி தொழிற்றிணைக்களத்தால் தொகுக்கப்படுவதாகும். கூலி நிருணயச்சபை ஏற்படுத்தப்பட்ட கைத்தொழில்களில் வேலைபார்க்கும் தொழிலாளர்களின் கூலி விகிதம் சம்பந்தப்பட்ட வகையிலும், தேர்ச்சி பெறாத அரசாங்கத் தொழிலாளர்களின் கூலி நடமாட்டங்கள் பற்றியுமே, விபரங்கள் கிடைத்திருக்கின்றன.

1957ம் ஆண்டு வரையில் விவசாயத் தொழிலாளர்களின் கூலி விகிதம் உயர்ந்த விதத்திலும் பார்க்க, விவசாயமல்லாத ஏனைய தொழில்களில் இருக்கும் ஊழியர்களின் கூலி விகிதம் தாழ்வாகவே உயர்ந்தது. 1958ம் ஆண்டு விவசாயமல்லாத ஏனைய

தொழில்களில் இருக்கும் ஊழியர்களின் கூலிவிகிதம் அதிகரிக்கப்பட்டது. 1959ம் ஆண்டு முழுவதும் இவ்வதிகரிப்புக்கள் செயற்பட்டது. ஆகவே விவசாயம் அல்லாத ஏனைய தொழில்களில் இருக்கும் ஊழியர்களின் கூலிவிகிதம், குறிகாட்டியின்படி முந்திய ஆண்டிலும் பார்க்க, 10.8 சதவீதத்தால் கூடியது ஆகும். தேர்ச்சி பெறாத தொழிலாளர்களின் கூலிவிகிதம் 1958ம் ஆண்டுவரை நிதானமாக உயர்ந்து, 1952ம் ஆண்டிலும் பார்க்க 26.7 சதவீதத்தால் கூடியதாக இருந்தது. 1959ம் ஆண்டு அவர்களுடைய கூலிவிகிதத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

வாழ்க்கைச் செலவுகள் மிக உயர்ந்ததன் காரணமாக விவசாயத் தொழிலாளர், தேர்ச்சி பெறாத அரசாங்கத் தொழிலாளர், ஆகியோருடைய மெய்க் கூலிகள் முறையே 0.4 சதவீதத்தாலும் 0.3 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன. இவ்வாழ்க்கைச் செலவின் ஏற்றத்தை ஈடுசெய்து அதற்கு மேலும் பயனளிக்கும் வகையில் விவசாயம் தவிர்ந்த ஏனைய தொழில்களில் இருக்கும் ஊழியர்களின் கூலி விகிதம் உயர்ந்தது. ஆகவே இவர்களின் மெய்க்கூலி 1958ம் ஆண்டிலும் பார்க்க 10.4 சதவீதத்தால் கூடியது ஆகும்.

**ஊழியர் சேம நிதி:** 1958ம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர், எல்லா அரசாங்க, ஆதிக்கமுள்ள கூட்டுத்தாபனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், வங்கிகள், பல் மாளிகைகள், சிகிச்சை விடுதிகள், கணக்குப் பரிசோதனைக் கூட்டு நிலையங்கள், காப்புறுதிக் கூட்டு நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பத்து ஏக்கருக்கு மேற்பட்ட தோட்டங்கள், மற்றும் கூலி நிருணயச் சபையின் கண்காணிப்புக்கு உட்பட்ட எல்லாத் தொழில்களும் ஊழியர் சேமநிதித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

**வேலை.**

இலங்கையிலுள்ள, வேலையற்றோர்களின் உண்மையான எண்ணிக்கை பற்றிய விபரங்கள் கிடையாது. ஆயினும் தொழில் இணைப்புக் காரியாலயங்களில் பதிவு செய்தோரின் மொத்த எண்ணிக்கை 1953ம் ஆண்டிற்கும் 1959ம் ஆண்டிற்கும் இடையில் 51,546ல் இருந்து 1,28,018க்கு உயர்ந்துள்ளது எனத்தெரிகிறது. 1959ம் ஆண்டு மேற்படி எண்ணிக்கையில் ஆகக் கூடிய அதிகரிப்பு அரைத்தேர்ச்சி பெற்ற தொழிலார்களிடையேயும், தேர்ச்சி பெறாத தொழிலாளர்களிடையேயும் ஏற்பட்டது. 1958ம் ஆண்டு முறையே 32,973ம், 51,343ம் ஆக இருந்த இவர்களது எண்ணிக்கை 1959ம் ஆண்டு 33,723க்கும், 59,567க்கும் உயர்ந்தது.

**தொழில் உறவுகள்:** 1958ம் ஆண்டு தோட்டங்களில் 123 வேலை நிறுத்தங்களும், ஏனைய தொழில்களில் 79 வேலை நிறுத்தங்களும் நிகழ்ந்தன. 1959ம் ஆண்டு தோட்ட வேலை நிறுத்தங்கள் 177, ஆகவும் ஏனைய தொழில் வேலை நிறுத்தங்கள் 71 ஆகவும் இருந்தன. 1959ம் ஆண்டு வேலை நிறுத்தங்களுக்கு மூன்று பிரதான காரணங்களாவன: வேலையாற்றச் சூழ்நிலைகள் பற்றிய பிணக்குகள், வேலை நீக்கம் அல்லது வேலையும் கூலியும் இழந்தமை பற்றி எழுந்த பிணக்குகள், கூலி உயர்வு தவிர்ந்த ஏனைய காரணங்கள் பற்றிய பிணக்குகள், என தொழிற்றிணைக்களம் ஆராய்ந்து வெளியிட்டதன் மூலம் தெரிகிறது. எல்லா வேலைநிறுத்தங்களிலும், 30.2 சதவீதமானவை வேலையாற்றச் சூழ்நிலை பற்றிய பிணக்குகள் காரணமாகவும், 18.2 சதவீதமானவை வேலை நீக்கம் அல்லது வேலையும் கூலியும் இழந்தமை பற்றிய பிணக்குகள் காரணமாகவும், 16.1 சதவீதமானவை சம்பள உயர்வு தவிர்ந்த ஏனைய விடயங்கள் பற்றி எழுந்த பிணக்குகள் காரணமாகவும் நிகழ்ந்தன. 1959ம் ஆண்டு நடைபெற்ற எல்லா வேலை நிறுத்தங்களிலும் 3.2 சதவீதமானவை கூலி உயர்வுக் கோரிக்கை காரணமாக எழுந்தன.

22621
10 JUN 2009

## II. பணம் சம்பந்தமான மாற்றங்கள்

### (அ) பணநிரம்பல்

ஒப்பிட்டு நோக்கும் பொழுது, 1958ம் ஆண்டு 366 இலட்சம் ரூபாய்களால் அல்லது 3.6 சதவீதத்தால் உயர்ந்த பணநிரம்பல், 1959ம் ஆண்டு 1001 இலட்சம் ரூபாய்களால் அல்லது 9.4 சதவீதத்தால் உயர்ந்தது. இதற்கு வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புகள் 658 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தமையும், நாணய உடைமைகள் 252 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தமையுமே, காரணங்களாகும்.

பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களுக்குப் பொறுப்பான காரணிகள், பின்வரும் அட்டவணையில் சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.